## உண்மைக்கு உண்மை

**நாடுவதற்கு, கூறுவதற்கு, செவிமடுப்பதற்கு, அறிவதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு, குணப்படுத்துவதற்கு…..**

முழுமையான மனித உரிமை மீறல்களின் உண்மைக்கும், பாதிக்கப்பட்டவர்களின் கௌரவத்திற்குமான உரிமைக்கான சர்வதேச தினம் உலகளாவியரீதியில் மார்ச் 24 அன்று நினைவுகூரப்படுகின்றது. இது, கடந்த காலத் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்களையும் அத்துடன் உண்மைக்கும், நீதிக்குமான உரிமையை முன்னேற்றுவதையும் நினைவுகூருவதற்கான தினமொன்றாகும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அவற்றுக்கு உத்தரவாதமளிப்பதற்கும், பயனுறுதிவாய்ந்த விசாரணைகளை நடத்துவதற்கும், அத்துடன் பயனுறுதிவாய்ந்த தீர்வுக்கும், இழப்பீட்டுக்கு உத்தரவாதமளிப்பதற்கும் அரசாங்கத்தின் கடமைக்கும், கடப்பாட்டுக்குமான இணைப்பினை உண்மைக்கான உரிமை கொண்டுள்ளது.

2015 செப்ரெம்பர்-ஒக்டோபரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது அமர்வின் தீர்மானத்தினை ஏற்றுக்கொண்டதோடு, இலங்கையில் நிலைமாற்ற நீதிக் கருத்தாடல் மீள்-சக்தியூட்டப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தினால் இணை-அனுசரணை வழங்கப்பட்ட ஒருமைப்பாட்டுத் தீர்மானமானது, இலங்கையினுள் கடந்த காலத் துஷ்பிரயோகங்களை அங்கீகரிப்பதையும், அத்துடன் விசாரிப்பதையும், வழக்குத் தொடுப்பதையும் மறுசீரமைப்பதையும் மற்றும் சீர்திருத்துவதையும் பொறுத்தளவில் முக்கியமானதொரு நடவடிக்கையாகும். சட்டவாக்கத்தைச் சீர்திருத்துவது மற்றும் உரிமையாளர்களுக்கு காணிகளை விடுவிப்பது போன்ற தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மேலதிகமாக, ஒரு விசேட நீதிமன்றம், உண்மைக்கும், நீதிக்கும், நல்லிணக்கத்திற்கும் மற்றும் மீள்-நிகழாமைக்கும் ஓர் ஆணைக்குழு, காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் என இலங்கையில் நான்கு பொறிமுறைகளைத் தாபிப்பதென வாக்களித்திருந்தது. இவை இலங்கையில் நல்லிணக்கத்திற்கான பாதையில் முக்கியமான நடவடிக்கைகள் என்பதுடன், முழுமையாக அமுல்படுத்தப்படவும் வேண்டும்.

இலங்கைக்கும், இலங்கையர்களுக்கும் 2016ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாகத் திகழும். ஒரு புதிய இலங்கைக்கு வாக்குறுதிகள் பலவாகும். கடந்த காலத் துஷ்பிரயோகங்களை அங்கீகரிப்பதும் அத்துடன் கணக்கிடுவதும் மற்றும் அதிகளவு அவசியப்பட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்குமான ஒரு சந்தர்ப்பமொன்றை நல்லிணக்கம் கொண்டிருக்க வேண்டுமென்பது முக்கியமானதாகும்.

இந்த ஓவியக்கண்காட்சியானது, கலை என்னும் ஊடகம் வாயிலாக நிலைமாற்ற நீதியை ஆராய்வதற்கு மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தினதும் (CPA), விபவி நுண்கலை கழகத்தினதும் (VAFA) இணை கூட்டுமுயற்சியொன்றாகும். சந்திரகுப்த தேனுவரவினாலும், பவானி பொன்சேகாவினாலும் 2016 பெப்ரவரியில் நடத்தப்பட்ட வதிவிடச் செயலமர்வொன்றில் இலங்கைக்கான நிலைமாற்ற நீதியினதும், அதன் தொடர்பினதும் கருத்துருவையிட்டும், அதைத் தொடர்ந்து இக்கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கலையம்சங்களின் தயாரிப்பு, தொடர்பாகவும், இலங்கையில் வாழும் பதின்நான்கு வளர்ந்து வரும் கலைஞர்களின் கலந்துரையாடலும், விவாதமும் மேற்கொள்ளப்பட்டது. முழுமையான மனித உரிமைகள் மீறல்களின்போது உண்மைக்கும், பாதிக்கப்பட்டவர்களின் கௌரவத்திற்குமான உரிமைக்கான சர்வதேச தினமான 2016 மார்ச் 24 அன்று, கலைக்கண்காட்சி ஆரம்பமாகின்றது. கடந்த காலத்தை அங்கீகரிப்பதற்கான அவசியத்தைப்பற்றியும், உண்மையையும், நீதியையும், இழப்பீட்டினையும், மீள்நிகழாமையையும் முன்னேற்றுவதையிட்டு இலங்கையர்களுக்கு இத் தினமும், அது எதை அடையாளப்படுத்துகின்றது என்பதும் உறுத்தக்கூடிய நினைவூட்டலொன்றாகும்.

நிலைமாறும் நீதி தொடர்பான கருப்பொருளைச் சுற்றியுள்ள கலையும், இலக்கியமும் நிலைமாறும் நீதி மீது கலந்துரையாடல்களை விஸ்தரிப்பதுடன், பிரதிபலிப்புக்கும், தீர்வுக்கும் மற்றும் மறுசீரமைப்பிற்கும் இடமொன்றை வழங்கும் எனவும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.